## தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்திற்கு

# 20 லட்சம் ரிங்கிட் இழப்பீடா?

## அமைச்சர் மறுப்பு



கோலாலம்பூர், மார்ச் 27-

ஜாலான் மஸ்ஜிட் இந்தியா கோலாலம்பூரில் உள்ள தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலயத்திற்கு அரசாங்கம் 20 லட்சம் ரிங்கிட் இழப்பீடு வழங்கியிருப்பதாக சுயேச்சை மதப்போதகர் ஃபிர்டாவ்ஸ் வோங் கூறியிருப்பதை பிரதமர் துறை கூட்டரசுப் பிரதேச அமைச்சர் டத்தோ டாக்டர் ஸலிஹா முஸ்தாபா நேற்று மறுத்தார்.

இந்தக் கூற்றில் உண்மை ஏதும் இல்லை. அது அடிப்படையற்ற கூற்று என்று அமைச்சர் தெளிவுபடுத்தினார்.

சம்பந்தப்பட்ட ஆலயத் தரப்பினருக்கு எந்தவிதமான இழப்பீடும் வழங்க அரசாங்கம் வாக்குறுதி அளிக்கவில்லை. இழப்பீட்டுத் தொகைக்கும் அங்கீகாரம் அளிக்கவில்லை என்று அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இந்த ஆலயத்தின் பிரச்சினைக்கான தீர்வை நேற்று முன்தினம் நான் அதிகாரப்பூர்வமாக அறிவித்திருக்கின்றேன். இதைத் தவிர்த்து வேறு எந்த உடன்பாடும் செய்யப்படவில்லை என்றும் அமைச்சர் நேற்றுத் தெரிவித்தார்.

பக்கம் 13

முதல் பக்கத் தொடர்ச்சி

### தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன்...

கிட்டத்தட்ட 130 ஆண்டுகள் பழைமைமிக்க தேவிஸ்ரீ பத்ரகாளியம்மன் ஆலய நிலப் பிரச்சினை பற்றி கடந்த பல நாட்களாக கடுமையான விவாதங்கள் நடைபெற்று வந்த வேளையில், ஜேக்கல் நிறுவனத்திற்குச் சொந்தமான அந்த நிலத்தில் பள்ளிவாசல் கட்டப்படுவதற்கு வழிவிடும் வகையில் ஆலயத்தை மாற்று நிலத்திற்கு மாற்ற ஆலய நிர்வாகத் தரப்பு இணக்கம் தெரிவித்துள்ளது.

சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருடன் பேச்சுவார்த்தை நடத்தப்பட்ட பிறகு இரண்டு தரப்பினருக்கும் சாதகமான தீர்வு வழங்கப்பட்டதாக அமைச்சர் டாக்டர் ஸலிஹா குறிப்பிட்டார்.

அந்தத் தனியார் நிறுவனத்திற்குச் சொந்தமான நிலத்தில் பள்ளிவாசலை எழுப்பும் திட்டம் 2020ஆம் ஆண்டு தொடங்கி ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

ஆனால், இப்போது அத்திட்டத்தைத் தொடர முடிகிறது என்பதுதான் மிக முக்கியம் என்று அவர் சொன்னார். அதேசமயம் அடையாளம் காணப்பட்ட மாற்று நிலத்திற்கு ஆலயத்தை இடமாற்றம் செய்ய ஆலய நிர்வாகத் தரப்பும் இணக்கம் தெரிவித்திருப்பதும் மிக முக்கியம் என்று அவர் சொன்னார்.

விவேகமான முறையில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட்டிருக்கிறது. சட்டவிதிகளுக்கு ஏற்பவும் பல்வேறு தரப்பினரின் உணர்வுகளைப் பரிசீலனை செய்த பிறகும் இந்தத் தீர்வு காணப்பட்டிருக்கிறது என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

ஆகவே, உறுதி செய்யப்படாத உண்மைக்குப் புறம்பான தகவல்கள் அடிப்படையில் இன, சமய உணர்வைத் தூண்டிவிட வேண்டாம் என அனைத்துத் தரப்பினரையும் அவர் கேட்டுக் கொண்டார்.

ஏனெனில், இதுபோன்ற செயல் நாம் ஒன்றாக இணைந்து கட்டி எழுப்பிய சுபிட்சத்தையும் அமைதியையும் ஒருமைப்பாட்டையும் இது சீர்குலைத்துவிடும் என்று அவர் எச்சரித்தார்.

இந்த ஆலயத்தை தற்போது உள்ள இடத்தில் இருந்து சுமார் 50 மீட்டர் தொலைவில் வேறு இடத்திற்கு மாற்ற நிர்வாகத் தரப்பும் கோலாலம்பூர் மாநகர் மன்றமும் இணக்கம் கண்டிருப்பதாக நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டது.

அந்த மாற்று நிலம் 4.000 சதுர அடி பரப்பளவைக் கொண்டிருக்கிறது. அதுமட்டுமன்றி அந்த மாற்று நிலம் இந்த ஆலயத்திற்கான நிரந்தர நிலமாகவும் பதிவு செய்யப்படும் என்பது குறிப்பிடத்தக்கது.